Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 145 · வெள்ளிக்கிழமை Friday · 27.03.2026 · பக்கங்கள் Pages:4 · ₹6 · ஈரோடு Erode

# திருவாரூரில் தேர்தல் பரப்புரையை தொடங்கும் முதலமைச்சர் ஸ்டாலின்

## ஏப்ரல் 6ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்கிறார்



சென்னை:

2026 சட்டமன்ற தேர்தலுக்கான பரப்புரையை முதலமைச்சரும், திமுக தலைவருமான முக ஸ்டாலின் வருகின்ற ஏப்ரல் 2 ஆம் தேதி திருவாரூரில் இருந்து துவங்க திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதத்திற்கும் குறைவான நாட்களே உள்ள நிலையில், தொகுதிப் பங்கீடு, வேட்பாளர் பட்டியல் வெளியீடு என்று தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, திமுக தனது தேர்தல் பிரச்சாரத்தை துவங்குவதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. குறிப்பாக, வரும் ஏப்ரல் 2ஆம் தேதி திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான முக ஸ்டாலின் திருவாரூரில் இருந்து தனது தேர்தல் பரப்புரையை தொடங்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மறைந்த முன்னாள் முதலமைச்சரும், திமுக முன்னாள் தலைவருமான கருணாநிதியின் சொந்த ஊர் திருவாரூர் என்பது கவனிக்கத்தக்கது. திருவாரூரை அடுத்து ஜெயங்கொண்டம், திருவெறும்புதூர் ஆகிய தொகுதிகளில் வாக்கு சேகரிக்கவும் ஸ்டாலின் திட்டமிட்டுள்ளார்.

இதையடுத்து ஏப்ரல் 3ஆம் தேதி திருச்சியிலும், ஏப்ரல் 4இல் கரூர், திருப்பூரிலும், ஏப்ரல் 5 ஆம் தேதி நாகர்கோவில், திருநெல்வேலியிலும், ஏப்ரல் 7ஆம் தேதி கோயம்புத்தூர், மேட்டுப்பாளையத்திலும் அவர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார்.

ஏப்ரல் 8ஆம் தேதி ஈரோடு, பரமத்திவேலூரிலும், ஏப்ரல் 9 அன்று தருமபுரி, கிருஷ்ணகிரியிலும், ஏப்ரல் 10 ஆம் தேதி வேலூர் மற்றும் ஆரணி ஆகிய தொகுதிகளிலும் அவர் பரப்புரை மேற்கொள்ள இருக்கின்றார்.

இதற்கு அடுத்தபடியாக ஏப்ரல் 11ஆம் தேதி சிவகங்கை, மதுரையிலும், ஏப்ரல் 12ஆம் தேதி விருதுநகர், சங்கரன்கோவிலிலும், ஏப்ரல் 13ஆம் தேதி தஞ்சாவூர், மயிலாடுதுறையிலும் ஸ்டாலின் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்காக வாக்கு சேகரிக்க உள்ளார்.

ஏப்ரல் 14ஆம் தேதி விழுப்புரம், நெய்வேலியிலும், ஏப்ரல் 15ஆம் தேதி ராணிப்பேட்டை, அணைக்கட்டிலும், ஏப்ரல் 16 கள்ளக்குறிச்சி. சேலம் ஆகிய தொகுதிகளிலும் முதலமைச்சர் பரப்புரையை மேற்கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து ஏப்ரல் 17-இல் தேனி மற்றும் ஆண்டிப்பட்டியில் முன்னாள் முதலமைச்சர் ஓபிஎஸ்-ஐ ஆதரித்து பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார் முதலமைச்சர் முக ஸ்டாலின். ஏப்ரல் 18 அன்று ராமநாதபுரம் மற்றும் விளாத்திகுளத்திலும், ஏப்ரல் 19 ஆம் தேதி செங்கல்பட்டு மற்றும் பெரம்பலூரிலும், 21-ஆம் தேதி ஸ்ரீபெரும்புதூர் மற்றும் இறுதியாக அவரது கொளத்தூரிலும் தொகுதியில் பிரச்சாரம் செய்ய முதலமைச்சர் முக ஸ்டாலின் திட்டமிட்டுள்ளார்.

அதன்படி ஏப்ரல் 2 முதல் 21 ஆம் தேதி வரை அவர் தொடர் பிரச்சார பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளவிருக்கின்றார். தினந்தோறும் காலை மற்றும் மாலை நேரங்களில் பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு பிரச்சாரம் செய்ய உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில், மீண்டும் கொளத்தூர் தொகுதியில் போட்டியிடுவதற்காக ஏப்ரல் 6 -ம் தேதி, மு.க. ஸ்டாலின் வேட்பு மனு தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று முதல் தனது தேர்தல் பிரச்சாரம் பயணத்தை துவக்கி உள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. இதேபோன்று நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தமிழ்நாடு முழுவதிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க.வுக்கு 10 தொகுதிகள்



கடந்த 2021 சட்டசபை தேர்தலில் 13 கட்சிகளுடன் கூட்டணி அமைத்து வெற்றி பெற்று ஆட்சி அமைத்த தி.மு.க., இந்த முறை 26 கட்சிகளுடன் மெகா கூட்டணி அமைத்துள்ளது. முதல் முறையாக தே.மு.தி.க.வும் அந்தக் கூட்டணியில் இணைந்துள்ளது. தே.மு.தி.க.வின் வருகை தி.மு.க.வுக்கு நல் வருகையாக தெரிந்தாலும், கூட்டணி கட்சிகளுக்கு அவ்வாறு தெரியவில்லை. தி.மு.க. கூட்டணியில் பல ஆண்டுகளாக இடம்பெற்றுள்ள காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவை இந்த முறை கூடுதல் தொகுதிகளை கேட்டுப்பெற வேண்டும் என்று திட்டமிட்டன. தங்களது விருப்பத்தையும் வெளிப்படையாக தெரிவித்தன.

ஆனால், கூட்டணிக்கு தலைமை தாங்கும் தி.மு.க.வோ, கூட்டணிக்கு புதிதாக வந்துள்ள கட்சிகளுக்கு தொகுதிகள் ஒதுக்க வேண்டியிருப்பதை சுட்டிக்காட்டி, கடந்த முறையைவிட ஒரு தொகுதியை குறைத்து தருவதாக அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. இதை, ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் ஏற்றுக்கொண்டன.

ஆனால், காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சிகள் விடாப்பிடியாக இருந்து கூடுதல் தொகுதிகளை பெற்றுக்கொண்டன. கடைசியில், தே.மு.தி.க.வுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. ஏற்கனவே, ஒரு ராஜ்ய சபா சீட் வழங்கப்பட்டுவிட்ட நிலையில், இவ்வளவு அதிக தொகுதிகளை ஒதுக்கியது, தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்த அதிருப்தி ஒரு பக்கம் இருந்தாலும், மற்றொருபுறம் கடந்த 2021 சட்டசபை தேர்தலில் 0.43 சதவீத வாக்குகளையே பெற்ற தே.மு.தி.க.வுக்கு 10 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது ஏன் என்ற கேள்வியும் எழுந்து வருகிறது.

தமிழக வடமாவட்டங்களில் வன்னியர்களின் செல்வாக்கு அதிகம். தற்போது, பா.ம.க. டாக்டர் ராமதாஸ், டாக்டர் அன்புமணி தரப்பு என இரண்டாக உடைந்துவிட்டதால், அக்கட்சிக்கான வன்னியர் வாக்கு சிதறும் என்று கூறப்படுகிறது. இதற்கிடையே, தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த மற்றொரு வன்னியர் கட்சியான தமிழக வாழ்வுரிமைக் கட்சியும் வெளியேறியது, தி.மு.க.வுக்கு வடமாவட்டங்களில் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

ஆனால், கடந்த காலங்களில் தே.மு.தி.க.வுக்கு செல்வாக்கு இருந்துள்ளது. 2011 சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த தே.மு.தி.க., 41 தொகுதிகளில் போட்டியிட்டு 29 இடங்களில் வெற்றி பெற்றது. இதில், பெரும்பாலான தொகுதிகள் வன்னியர்கள் நிறைந்த வடமாவட்டங்கள் ஆகும். எனவே, அந்த ஓட்டுகள் இப்போதும் தே.மு.தி.க.வுக்கு அப்படியே கிடைக்குமா என்பது கேள்விக்குறியாக இருந்தாலும், விஜயகாந்தின் மறைவுக்கு பிறகு நடைபெறும் முதல் தேர்தல் என்பதால், அனுதாப ஓட்டுக்களை கொண்டுவரும் என்று தி.மு.க. தலைமை நம்புகிறது.

அதேபோல், விஜயகாந்த் மனைவி பிரேமலதா நாயுடு சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதால், மதுரை, தேனி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அச்சமுதாய வாக்குகள் கிடைக்கும் என்றும் தி.மு.க. தலைமை நினைக்கிறது. இப்படி, ஒரே கட்சி மூலம் 2 சமுதாய வாக்குகளை பெற முடியும் என்று தி.மு.க. தலைமை நினைத்ததாலேயே தே.மு.தி.க.வுக்கு 10 தொகுதிகளை அள்ளிக்கொடுத்திருப்பதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில், எங்களை விட வாக்கு சதவீதத்தில் குறைவாக உள்ள தே.மு.தி.க.வுக்கு இவ்வளவு தொகுதிகளா என்றும் தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மனக்குமுறலில் இருப்பதாக சொல்லப்படுகிறது.

# மாம்பழம் சின்னத்தை முடக்க முடியாது: ராமதாஸ் வழக்கில் தேர்தல் ஆணையம் திட்டவட்டம்



சென்னை: பாமக தலைவராக தன்னை அங்கீகரிக்க வேண்டும், உட்கட்சி பிரச்சினை தொடர்பான உரிமையியல் வழக்கில் தீர்வு எட்டப்படும் வரை, மாம்பழம் சின்னத்தை முடக்கி வைக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட கோரி ராமதாஸ் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

முன்னதாக, ராமதாஸ் தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், மாம்பழம் சின்னம் தொடர்பாக சென்னை உரிமையியல் நீதிமன்றம் விசாரித்து மூன்று நாட்களுக்குள் உத்தரவிட ஆணையிட்டது.

அதன்படி, இந்த வழக்கின் விசாரணை சென்னை 12-வது கூடுதல் உரிமையியல் நீதிமன்ற நீதிபதி தர்மபிரபு முன் இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது ராமதாஸ் தரப்பில் மூத்த வழக்கறிஞர் எஸ்.பிரபாகரன் ஆஜராகி, "அன்புமணி ராமதாஸ் தலைவராக தேர்வு செய்யப்பட்ட பின்புதான் பாமக கட்சிக்கான அங்கீகாரமே ரத்தானது. 2025-28 வரை மீண்டும் அன்புமணியை தலைவராக தேர்ந்தெடுக்க சிறப்பு நிர்வாக குழு எதிர்ப்பு தெரிவித்தது. தேர்தல் ஆணையத்துக்கும் அன்புமணி மீண்டும் தலைவராக தேர்ந்தெடுக்கப்படவில்லை என தகவல் தெரிவிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டார்.

மேலும், "அன்புமணி ராமதாஸ் கட்சி விரோத செயல்களில் ஈடுபட்டதால் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். ஆனால், மீண்டும் தலைவராக தேர்வு செய்யப்பட்டதாக ஆவணங்களை மோசடியாக தயாரித்து தேர்தல் ஆணையத்தை அன்புமணி ஏமாற்றியுள்ளார். இது குறித்து ஐந்து முறை தேர்தல் ஆணையத்துக்கு நோட்டீஸ் அனுப்பி தெரிவிக்கப்பட்டது. ஆனால் அன்புமணிக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்க தேர்தல் ஆணையத்துக்கு என்ன இவ்வளவு ஆர்வம் என தெரியவில்லை" எனவும் அவர் வாதங்களை முன்வைத்தார். மேலும், "தி.நகரில் உள்ளது அன்புமணியின் வீடு, ஆனால் அதை பாமக அலுவலகமாக தேர்தல் ஆணையம் எப்படி கருதியது? அன்புமணியின் பதவிக் காலம் முடிந்தும், தேர்தல் ஆணையம் எப்படி அன்புமணியை தலைவராக ஏற்றது என தெரியவில்லை? அவர் தேர்தலில் போட்டியிடட்டும். நாங்களும் போட்டியிடுகிறோம். மக்கள் முடிவு செய்யட்டும்" என வாதிட்டார். பொதுச் செயலாளர் வடிவேல் ராவணன் தரப்பில் மூத்த வழக்கறிஞர் என்.எல். ராஜா ஆஜராஜி, "இந்த மனு தாக்கல் செய்யப்பட்ட முறையே தவறானது. ராமதாஸ் தலைவராக உள்ளார் என்றால், ஏன் தன்னை தலைவராக அறிவிக்க வேண்டும் என வழக்கு தொடர்ந்துள்ளார்?" என்று வாதிட்டார்.

தேர்தல் ஆணையம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நிரஞ்சன் ராஜகோபால், "இந்த வழக்கு தந்தை - மகனுக்கு இடையே உள்ள பிரச்சினை. மாம்பழம் சின்னத்தை தற்போதைய நிலையில் முடக்க முடியாது. தேர்தல் நடைமுறை தொடங்கிவிட்டதால், நீதிமன்றம் தலையிட்டு உத்தரவு பிறப்பிக்க முடியாது. புதுவையில் சின்னம் ஒதுக்கப்பட்டு விட்டது" என்று வாதிட்டார்.

அன்புமணி தரப்பில் மூத்த வழக்கறிஞர் சித்ரா சம்பத் ஆஜராகி, "நிறுவனர் ராமதாஸை சிலர் தவறாக வழி நடத்துகின்றனர். இது தந்தை - மகனுக்கு இடையேயான பிரச்சினை மட்டுமே. ஆனால் அதை வைத்து சிலர் அரசியல் செய்கின்றனர்.

பாமக பதிவு செய்யப்பட்ட கட்சியாக இருப்பதால் மாம்பழம் சின்னம் வேறு யாருக்கும் சென்றுவிடக் கூடாது என்பதற்காக சின்னம் பெறப்பட்டது. பாமகவுக்கு மாம்பழம் சின்னம் கிடைத்திருக்கக் கூடாது என்பதை தான் ராமதாஸ் விரும்புகிறாரா? அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக இருந்ததால் விதிகளின்படி மாம்பழம் சின்னம் யாருக்கும் ஒதுக்கப்படாது என்றாலும், இந்த முறை சின்னம் கிடைக்காமல் தேர்தலில் நின்றால் வாக்காளர்களுக்கு குழப்பம் ஏற்படும்.

2025 ஆகஸ்ட் மாதம் சிறப்பு பொதுக்குழு நடத்தப்பட்டு ராமதாஸ் செயல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதாக கூறுவது போலியானது. பொதுக்குழு நடத்தப்படும் என 21 நாட்களுக்கு முன் நிர்வாகிகளுக்கு அழைப்புவிடுத்து அதன்பின் பொதுக்குழு கூட்டப்பட வேண்டும். அப்படி கூட்டப்பட்டதற்கான ஆதாரங்கள், ஆவணங்கள் இல்லை.

பழைய முகவரியை மாற்ற வேண்டும் என ராமதாஸ் தெரிவிப்பதில் இருந்தே, தி.நகர் அலுவலகத்தில் ஏற்கெனவே பாமக அலுவலகம் செயல்பட்டு வந்தது என்பதை ராமதாஸ் ஏற்றுக் கொள்கிறார்" என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து தேர்தல் ஆணையத்தின் சார்பில், "அன்புமணி மற்றும் ராமதாஸ் என்ற தனி நபர்களுக்கு சின்னம் ஒதுக்கப்படவில்லை. பாமக என்ற பெயரில் மட்டுமே சின்னம் ஒதுக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட கட்சியான பாமக இலவச சின்னமான மாம்பழத்தை ஒதுக்க வேண்டும் என கோரிக்கை வைத்தது. அதனடிப்படையில் சின்னம் வழங்கப்பட்டது. உச்ச நீதிமன்றம் கூட குறிப்பிட்ட பிரிவுகளை தவிர சின்னம் ஒதுக்கீடு தொடர்பான தேர்தல் ஆணையம் முடிவில் தலையிட முடியாது. 2 ஆண்டுகள் எந்த அலுவலகத்தில் இருந்து தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் வந்ததோ? அந்த முகவரிக்குத்தான் சின்னம் ஒதுக்கீடு செய்து கடிதம் அனுப்பப்பட்டது" என்றனர்.

இதன் தொடர்ச்சியாக, பாமக தலைவராக தன்னை அங்கீகரிக்க வேண்டும், உட்கட்சி பிரச்சினை தொடர்பான உரிமையியல் வழக்கில் தீர்வு எட்டப்படும் வரை, மாம்பழம் சின்னத்தை முடக்கி வைக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட கோரிய மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**
**தினத்தளம்**
DHINATH DHALAM
**வாட்ஸ் அப் குரூப்பில்**
**இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# முதலமைச்சர் உத்தரவிட்டால் போடி தொகுதியில் போட்டியிடுவேன்; ஓ.பன்னீர்செல்வம் பேட்டி



தமிழகத்தில் அதிமுக கூட்டணிக்கு யார் தலைமை என தெரியவில்லை? அதிமுக கூட்டணிக் கட்சிகள் பாஜகவின்தாமரைசின்னத்தில் தான் போட்டியிடுகிறார்கள் என்றும் தெரிவித்தார்*

ேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் உள்ள அலுவலகத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார்

அப்போதுபேசிய அவர் எடப்பாடி பழனிசாமி ஆளுமை மிக்க அரசியல் தலைவர் இல்லை, சட்டமன்றம், நாடாளுமன்றம் என கடந்த 10 தேர்தலிலும் தோல்வியை மட்டுமே தழுவியுள்ளார் எடப்பாடி பழனிச்சாமி தற்போது அறிவித்து இருக்கும் தேர்தல் அறிக்கை பொய்யான அறிக்கை,மக்களை நம்ப வைக்க இவர் அறிவிக்கும் தேர்தல் அறிக்கை மக்களிடம் எடுபடாது

தென்மாவட்டங்களில் நான் சுற்றுப்பயணம் செய்து வருகிறேன் மக்களின் ஆதரவு திமுகவிற்கு உள்ளது தென் மாவட்டங்களில் உள்ள 58 தொகுதிகளிலும்திமுகதான் வெற்றிபெறும்

போடி தொகுதியில் நான் எம்எல்.ஏ வாக இருந்த போது தொகுதி மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி விட்டேன் முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டால் போடி தொகுதியில் போட்டியிடுவேன் என்று தெரிவித்தார்

தமிழகத்தில் அதிமுக கூட்டணிக்கு யார் தலைமை என தெரியவில்லை? அதிமுக கூட்டணிக் கட்சிகள் பாஜகவின்தாமரைசின்னத்தில் தான் போட்டியிடுகிறார்கள் அதிமுகவில் தொண்டர்களே தற்போது இல்லை அங்கு இருந்த லட்சக்கணக்கான அதிமுக தொண்டர்கள் அனைவரும் திமுகவில் இணைந்து விட்டனர்

மக்களுக்கு பயனுள்ள திட்டங்கள் அனைத்தும் இடம்பெறும் வகையில் திமுக தேர்தல் அறிக்கை விரைவில் வரும் என தெரிவித்தார்

ராமதாஸ் - சசிகலா வைத்துள்ள கூட்டணியால் எங்களுக்கு எந்த பாதகமும் இல்லை அவர்களது கூட்டணிக்கு எங்களது வாழ்த்துக்கள் எனதெரிவித்தார் திமுகவிற்கு அரசியல் களத்தில் எதிரிகள் என யாரும் இல்லை விஜய் முதலில் அரசியல் களத்தில் தன்னை முதலில் நிரூபிக்க வேண்டும்

கொரோனா காலத்தில் 140 நாட்கள் மதுபான கடைகள் அடைக்கப்பட்டு இருந்தது எடப்பாடி பழனிச்சாமி நினைத்திருந்தால் அப்போதே மதுபான கடைகளை முழுவதுமாகமூடி இருக்கலாம் ஆனால் அவர் அதை செய்யவில்லை என விமர்சனம் செய்தார்

தமிழகத்தில் போதை புழக்கம், பாலியல் குற்றங்கள் நடைபெறுவது இயற்கை தான் ஆனால் அதற்கு திமுக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளதுஎனதெரிவித்தார்

எடப்பாடி பழனிசாமி தமிழகத்தின் முதலமைச்சராக பதவி ஏற்றால் நான் தூக்கில் தொங்குவேன் என்று கூறிய டிடிவி தினகரன் தற்போது எடப்பாடி பழனிசாமியை மதிப்பிற்குரிய அண்ணன் என்று கூறுகிறார்

கட்சியில் மீண்டும் தன்னை இணைக்க எடப்பாடி பழனிசாமியிடம் பேசுங்கள் என மத்திய அமைச்சர் அமித் ஷாவிடம் கூறினேன் ஆனால் நான் கூறியும் எடப்பாடி பழனிச்சாமி என் பேச்சை கேட்கவில்லை என தெரிவித்துவிட்டார் கடந்த சட்டமன்றத் தேர்தலில் நான் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி அமித்ஷாவிடம் ஆலோசனை செய்த போது 150 தொகுதிகளில் வெற்றி பெறுவேன் என தெரிவித்தார் எடப்பாடி பழனிச்சாமி ஆனால் தோல்வியை சந்தித்தார்

வருகிற சட்டமன்றத் தேர்தலில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் மதசார்பற்ற கூட்டணி மாபெரும்வெற்றிபெறும் என தெரிவித்தார்.



தென்காசி மாவட்டம் அகரக்கட்டில் உள்ள

தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில்

# மாவீரன் கராத்தே செல்வின் நாடாரின் 29 வது ஆண்டு வீரவணக்கம் செலுத்தப்பட்டது

மாவீரன் கராத்தே செல்வின் நாடாரின் 29 வது ஆண்டு வீரவணக்கம் செலுத்தப்பட்டது தென்காசி மாவட்டம் அகரக்கட்டில் உள்ள தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில் கராத்தே செல்வின் நாடார்க்கு வீரவணக்கம்செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் பேசும் போது

கராத்தே செல்வின் நாடார் குமரியில் பிறந்து நெல்லையில் வாழ்ந்தவர் நாடார் சமுதாய மக்கள் ஒன்று சேர வேண்டும் நாடார்களுக்கு என்று ஒரு அரசியல் அமைப்பு வேண்டும் அரசியலில் நாடார்களுக்கு அங்கீகாரம் வேண்டும் என்று 1996 ஆம் ஆண்டு காமராஜர் ஆதித்தனார் கழகத்தை தொடங்கினார் நாடார் சமுதாயத்தில் இவரைப் போன்ற வலிமையான ஒரு தலைவர் இவருக்கு பிறகுஇன்றளவும்யாரும் இல்லை நாடார் மக்களின் முன்னேற்றமே தன் வாழ்வின் லட்சியம் என்று வீர முழக்கமிட்டவர் மாவீரன் கராத்தே செல்வின் நாடார்

உலகம் எங்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் நாடார் சமுதாயத்திற்கு ஒரு அடையாள சின்னம் வேண்டும் என்று புளூ பச்சை நிறத்தில் கொடியை உருவாக்கி இதுதான் நாடார்களின் வெற்றிக் கொடி என்று 1996 ஆம் ஆண்டு அறிமுகம் செய்து வைத்தார் அந்த கொடி தான் இன்று பல்வேறு பரிமாணங்களில் பல்வேறு அடையாளங்களில் நாடெங்கும் நாடார்களின் அடையாள கொடியாக பறந்து கொண்டிருக்கிறது என்று பேசினார் முன்னதாக கராத்தே செல்வின் நாடார் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினார்கள்

இந்த நிகழ்ச்சியில் பொருளாளர் சுப்பிரமணியன் மாநில கல்வி குழு ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியன் தென்காசி மாவட்ட தலைவர் குருசாமி நாடார் கடையநல்லூர் ஒன்றிய தலைவர் மணிகண்டன் முருகேஸ் ஜஸ்டின் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்

# காழ்ப்புணர்ச்சி காரணமாகவே தங்கள் மீது பொய் குற்றசாட்டு சுமத்துவதாக தவெக பெண் நிர்வாகி புகார்



மதுரைஆட்சியர்அலுவலகத்தில் தமிழக வெற்றி கழகத்தின் மதுரை தெற்கு மாவட்ட கலை மற்றும் கலாச்சார பிரிவு அமைப்பாளர் பாத்திமா ஹனியா அவர்கள் செய்தியாளர்களை சந்தித்தார்,சந்திப்பில்,

கடந்தசில நாட்களுக்கு முன் தவெகவின் மதுரை தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளரான ஷர்மிளா அவர்கள் என்னிடம் பல லட்சம் ரூபாய் பணத்தை கொடுத்து ஏமாத்து போனதாகவும்,அது மட்டும் அல்லாது

தெற்கு மாவட்ட செயலாளர் தங்கபாண்டி அவர்கள் பல லட்சம் ரூபாய் பணம் பெற்றுக் கொண்டு ஏமாற்றியதுடன், பதவியை பறித்துக் கொண்டதாகவும் கூறி,

அதற்க்காக அவர் விஷம் சாப்பிட்டு தற்கொலை முயற்ச்சியில் ஈடுபட்டதாகவும் சொல்லி ஒரு காணொலியை சமூக வளைதளத்தில் பரப்பி உள்ளார், அதுவே பொய்யான குற்றசாட்டுகள்,

அது போதது என்று அவருடைய கணவர் பாலாஜி இரண்டு தினம் முன்பு செய்தியாளர்களிடம்

தன் மனைவி வகித்து வந்த பதவியை தற்போது வேறு பெண்ணிற்குஏராளமான பணத்தை பெற்றுக்கொண்டு வழங்கிவிட்டதாகவும், நாங்கள் நடத்தும் ஐடி

நிறுவனத்தில் பணம் முதலீடு செய்தால் அதிக லாபம் ஈட்டலாம் என்றும், அதன் மூலம் கட்சிக்கும் வளர்ச்சி ஏற்படும் என மாவட்ட செயலாளர் தங்கபாண்டி கூறியதால் நிலத்தை அடமானம் வைத்து ரூ.16 லட்சத்தை

நாங்கள் நடத்தி வரும் ஐடி கம்பெனியில்

முதலீடு செய்ததாகவும் அதற்க்கு தற்போது வரையில் நாங்கள் எந்த வித லாபத்தையோ அல்லது அசல் தொகையோ கொடுக்கவில்லை என்றும் அதனால் கடனாளியாக ஆகிவிட்டதாகவும் அதனால் மன உளைச்சலில் அவரது மனைவி ஷர்மிளா விஷம் குடித்து தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார் எனவும் ஒரு கட்டுகதையை சொல்லி என் மீது ஒரு பொய் குற்றச்சாட்டை வைத்தார், அவை அனைத்தும் பொய்யான தகவல்கள், நடத்து என்னா,

நான் கடந்த ஆண்டு தான் தவெகவில் மகளிர் அணி அமைப்பாளரான ஷர்மிளா மூலம்தான் கட்சியில் சேர்ந்து பணியாற்ற தொடங்கினேன். தொடர்ந்து ஷர்மிளாவுக்கு கீழ் மகளிர் அணியில் பொருளாளராக இருந்து வந்தேன். அப்போது ஷர்மிளா டிரேடிங் மூலம் பணம் சம்பாதித்து தரும்படி சுமார் 12 லட்சம் அளவிற்கு பல தவணைகளாக எனக்கு அனுப்பி இருந்தார்.பின்னர் அவருக்கு 16 லட்சம் ரூபாய் வரையில் ஜிபே (GPay) மூலமாகவும், ரொக்கமாகவும் திருப்பி வழங்கி விட்டேன்,அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளது,

இருந்தும் கடந்த சில மாதங்களாக என்னிடம் கூடுதலாக பணம் கேட்டு என்னை வற்புறுத்தி வந்தனர். நான் பொது சேவைகளில் ஈடுபட்டு வந்ததால் கட்சி தனக்கு சமீபத்தில் கலை மற்றும் கலாச்சாரபிரிவுஅமைப்பாளராக பதவி கொடுத்தால் அவர்களால் அதை பொறுத்துக் கொள்ள முடியாமல் என் மீது இது போன்று தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருகின்றனர். அவர்கள் மீது காவல் ஆணையர் அவர்களிடம் நாங்கள் புகார் தெரிவித்துள்ளோம்,காவல்துறை நன்கு விசாரித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறேன், இவ்வாறு கூறினார்.

# மதுரை வந்த திருப்பரங்குன்றம் அதிமுக வேட்பாளர் ராஜன் செல்லப்பாவை உற்சாகத்துடன் வரவேற்ற தொண்டர்கள்

தமிழக சட்டமன்றத் தேர்தல் வருகிற ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ளது.இந்தநிலையில் அனைத்து கட்சிகளும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை அறிவிப்பதில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த நிலையில் அதிமுகவில் சார்பில் முதல் வேட்பாளர் பட்டியல் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியால் நேற்று வெளியிட்டார்.23 பேர் கொண்ட பட்டியலில் 21 பேர் முன்னாள் முதலமைச்சர், அமைச்சர் பதவியில் இருந்தவர்கள் அமைச்சர் பதவியில் இல்லாத திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி எம்எல்ஏ வாக உள்ள வி வி ராஜன்



செல்லப்பாவும் இந்த பட்டியலில் இடம் பெற்று இருந்தார். அதனைத் தொடர்ந்து சென்னை சென்று இருந்த எம் எல் ஏ ராஜன் செல்லப்பா இன்று நண்பகல் விமான மூலம் மதுரை வந்தடைந்தார். மதுரை விமான நிலையத்தில் காத்திருந்தார் அதிமுக நிர்வாகிகள் தொண்டர்கள் மதுரை விமான நிலையத்தில் அவருக்கு ஆள் உயர மாலை அணிவித்து கிரீடம் சால்வை அணிவித்து விசில் அடித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். அதில்சிலதொண்டர்கள் அமைச்சர் ராஜன் செல்லப்பா வாழ்க என கோசம் எழுப்பினர். அதில் ஒரு தொண்டர் வருங்காலpwdஅமைச்சர் வாழ்க பொதுப்பணித்துறைஅமைச்சர்வாழ்க என கோசம் எழுப்பி உற்சாகத்துடன் வரவேற்றனர்.

# தனியார் பேருந்து நடத்துனரிடம் மாமுல் கேட்டு மிரட்டும் அரசு பேருந்து நடத்துனர்




கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைபேருந்து நிலையத்தில் கொடுமுடியில் இருந்து இயங்கும் TN33N3667பேருந்து சரியான கால நேரத்திற்கு வருவதில்லை இவர்கள் தனியார் பேருந்து கால அட்டவணையில் தான் பேருந்து கொண்டிருக்கிறார்கள் இதனால் திருவண்ணாமலை செல்லும் தனியார் பேருந்துகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றன இதைப்பற்றி தனியார் பேருந்து நடத்தினர் அரசு பேருந்து நடத்துனரிடம் கேட்டபோது அரசு பேருந்து நடத்துனர் நீங்கள்தினமும் எனக்கு100 ரூபாய் கொடு நான் உங்கள்பேருந்து பின்னாடி வருகிறேன் இல்லையெனில் நான் தினமும் உனது பேருந்து கால அட்டவணையில் தான் இந்த பேருந்து இயக்குவேன் என்று தனியார் பேருந்து நடத்துனர் இடத்தில் வாக்குவாதத்தில் ஈடுபடுகிறார் என்பது தனியார் பேருந்து நடத்துனர் குற்றச்சாட்டாக முன்வைத்து வருகிறார் எனவே தனியார் பேருந்து கால நேரத்தில் அரசு பேருந்து இயக்கிக் கொண்டு இது போன்றலஞ்சம்கேட்கும் நடத்துனர் மீது கடுமையான நடவடிக்கை வேண்டும் என்று தனியார் பேருந்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் கோரிக்கை வைக்கின்றனர் இதை உடனடியாக ஆய்வு செய்து இது போன்ற நடத்துனர் மீது நடவடிக்கை எடுப்பார்களா சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இவர்களின் எதிர்பார்ப்பு..

கோவை துடியலூர் அடுத்த வட்டமலைபாளையம் பகுதியில் உள்ள,

# கங்கா நர்சிங் அன்ட் அலைடு ஹெல்த் சயின்சஸ் கல்லூரி ஐ.எஸ்.ஓ. சான்றிதழைப்பெற்று சாதனை படைத்தது

கோவை துடியலூர் அடுத்த வட்டமலைப்பாளையத்தில்உள்ளகங்கா நர்சிங் அன்ட் அலைடு ஹெல்த் சயின்சஸ் கல்லூரி, உயர்தரமான கல்வி, தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் கல்வி மேலாண்மையில் சிறந்துவிளங்குதல்ஆகியவற்றிக்காக, கல்வி நிறுவனங்களுக்கான மேலாண்மை அமைப்புகளுக்கான மதிப்பிற்குரிய 'ஐ எஸ் ஓ இருபத்தி ஓர் ஆயிரத்து ஒன்று - இரண்டாயிரத்து பதினெட்டு' சான்றிதழைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

கோவை கங்கா மருத்துவமனையின் ஓர் அங்கமான கங்கா நர்சிங் அன்ட் அலைடு ஹெல்த் சயின்சஸ் கல்லூரி துடியலூர் அருகே வட்டமலைப்பாளையத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியானது கல்வி நிறுவனங்களுக்கான மேலாண்மை அமைப்புகளுக்கான மதிப்பிற்குரிய 'ஐ எஸ் ஓ இருபத்தி ஓர் ஆயிரத்து ஒன்று - இரண்டாயிரத்து பதினெட்டு ' சான்றிதழைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இந்தச் சான்றிதழ் வழங்கும் விழா கோவை கங்கா மருத்துவமனை




கூட்ட அரங்கில் நடைபெற்றது. இதற்கு சென்னை, டியுவி எஸ்யுடி சவுத் ஆசியா நிறுவனத்தின் மேலாண்மை அமைப்புகள் பிரிவின் துணைத் தலைவர் எம். பன்னீர் செல்வம் தலைமை தாங்கினார். இந்நிறுவனத்தின் கோவை பொது மேலாளர் லோகநாதன் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டார். இந்தச் சான்றிதழ் கங்கா மருத்துவமனையின் இயக்குனர் குழுவிடம் வழங்கப்பட்டது. கங்கா மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் கனகவள்ளி சண்முகநாதன், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, கை மற்றும் நுண் அறுவை சிகிச்சை மற்றும் தீக்காயப் பிரிவின் தலைவர் டாக்டர். எஸ்.ராஜசபாபதி,எலும்பியல் துறை தலைவர் பேராசிரியர் டாக்டர். எஸ்.ராஜசேகரன்,இயக்குனர்கள் நிர்மலா ராஜசபாபதி மற்றும் ரமா ராஜசேகரன், கங்கா நர்சிங் கல்லூரியின் முதல்வர் டாக்டர் ஜெபகுமாரி சுதா ஆகியோர் சான்றிதழைப் பெற்றுக் கொண்டனர். சிறந்த கல்வியை வழங்குவதிலும், உலகளாவிய தரங்களைப் பின்பற்றுவதிலும் இந்தச் சாதனை ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் 'ஐ எஸ் ஓ இருபத்தி ஓர் ஆயிரத்து ஒன்று - இரண்டாயிரத்து பதினெட்டு ' சான்றிதழைப் பெறும் இரண்டாவது நர்சிங் கல்லூரி மற்றும் கோயம்புத்தூர் மண்டலத்தில் இந்த அங்கீகாரத்தைப் பெறும் முதல் நர்சிங் கல்வி நிறுவனம் இதுவாகும். கல்வியில் உயர் தரம், மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் சூழலை உருவாக்குதல், மற்றும் மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் நலனுக்காக கல்லூரி நடைமுறைகளைத் தொடர்ந்து மேம்படுத்துதல் ஆகியவற்றில் இந்த நிறுவனத்தின் அர்ப்பணிப்பை இந்தச் சாதனை எடுத்துக்காட்டுகிறது.

நான்காவது முறையாக மதுரை மேற்கு தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடப் போகும்

# வேட்பாளர் செல்லூர் ராஜூக்கு மதுரை விமான நிலையத்தில் அதிமுக தொண்டர்கள் கையில் வேல் கொடுத்து உற்சாக வரவேற்பு



தமிழக சட்டமன்றத் தேர்தல் வருகிற ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ளது.இந்தநிலையில் அனைத்து கட்சிகளும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை அறிவிப்பதில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த நிலையில் அதிமுகவில் சார்பில் முதற்கட்ட வேட்பாளர் பட்டியல் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி வெளியிட்டார்.23 பேர் கொண்ட பட்டியலில் 21 பேர் முன்னாள் முதலமைச்சர்,அமைச்சர்பதவியில் இருந்தவர்கள் சென்னை சென்று இருந்த முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான செல்லூர் ராஜு இன்று மதியம் விமான மூலம் மதுரை வந்தடைந்தார். அவரை மதுரை விமான நிலையத்தில் வரவேற்க காத்திருந்த அதிமுக நிர்வாகிகள் தொண்டர்கள் மதுரை விமான நிலையத்தில் அவருக்கு ஆள் உயர மாலை அணிவித்து பூங்கொத்து கொடுத்து சால்வை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து தொண்டர்கள் மேற்கு தொகுதியில் செல்லப்பிள்ளை வருங்கால அமைச்சர் என கோஷம் எழுப்பினர் தொண்டர்கள் சிலர் அவருக்கு கையில் வேல் கொடுத்து வரவேற்றனர்.



எதிர்வரும் 23.4.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (26.03.2026) ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேருந்து நிலையத்தில் இசைக்கேற்ப நடனமாடும் குதிரை கொண்டு நிகழ்ச்சி நிகழ்த்தி பொதுமக்களிடம் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்திய நிகழ்ச்சியில் பங்கேற்ற போது எடுத்த புகைப்படம்.

# வி ஜி இன்ஸ்ட்டியூட் ஆப் பாராமெடிக்கல் சயின்சஸ் மற்றும் வி ஜி ஸ்கூல் ஆப் நர்சிங் கல்லூரி சார்பில் அரீனா ஆப் சாம்ப்பியன்

## விளையாட்டு தின விழா வெகு விமர்சையாக நடைபெற்றது



கோவை துடியலூர் அருகே செயல்பட்டு வரும் வி ஜி குழும நிறுவனங்களின் ஒர் அங்கமான வி ஜி இன்ஸ்ட்டியூட் ஆப் பாராமெடிக்கல் சயின்சஸ் மற்றும் வி ஜி ஸ்கூல் ஆப் நர்சிங் கல்லூரி சார்பில் அரீனா ஆப் சாம்ப்பியன் என்ற பெயரில் ராதா வேணுகோபால் அவர்களின் நினைவாக விளையாட்டு தின விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் கல்லூரியில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மெடல்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் ஒட்டுமொத்த சாம்ப்பியன் பட்டம் வென்ற கிரீன் அணியினருக்கு பரிசுக் கோப்பை வழங்கப்பட்டது. கோயம்புத்தூர் துடியலூர் அருகே உள்ள வி ஜி குழும நிறுவனங்களின் ஒர் அங்கமாக செயல்பட்டு வருகிறது வி ஜி இன்ஸ்ட்டியூட் ஆப் பாராமெடிக்கல் சயின்சஸ் மற்றும் வி ஜி ஸ்கூல் ஆப் நர்சிங் கல்லூரி.

இக்கல்லூரி சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 15 அன்று வி ஜி குழுமங்களின் முன்னாள் இயக்குநர் ராதா வேணுகோபால் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது நினைவாக கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டு விழா நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சியில் கோயம்புத்தூர்சி ஆர்பிஎப் மத்திய பயிற்சி கல்லூரியின் நிர்வாக உதவி கட்டளை அதிகாரி ஆர் கிஷோர் குமார் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அவர் பேசும்போது மருத்துவத்துறையில் செவிலியர்களின் பங்கு குறித்தும், தன் சொந்த அனுபவத்தில் செவிலியர்களால் அடைந்த பயன்கள் குறித்தும் எடுத்துக்கூறிவாழ்த்துதெரிவித்தார். மேலும் செவிலியர்கள் இதுபோன்ற விளையாட்டுக்களில்கவனம்செலுத்தி தங்கள் உடல்நலன்களில் அக்கரை செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து விழாவின் முக்கிய நிகழ்வுகளான கொடி அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு ஒலிம்பிக் ஜோதியை ஏற்றிவைத்தார். அதனை மாணவர்கள் ரிலே முறையில் மைதானம் முழுவதும் வலம் வந்து ஏற்றிவைத்து விளையாட்டு போட்டிகளை தொடங்கினர். இதையட்டு மாணவர்கள் மற்றும் மாணவிகள் 4 அணிகளாக பிரிக்கப்பட்டு பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. இதில் மாணவ மாணவிகள் ஆர்வமுடன்பங்கேற்றுவிளையாடினர். மேலும் மாணவர்கள் பல்வேறு வடிவில் உருவாக்கிய மனித பிரமிடுகள் மற்றும் சிலம்பம் சுற்றுதல் அனைவரையும் கவர்ந்தது.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கு வி ஜி மருத்துவ குழுமங்களின் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஆஷா வெங்கடேஷ், தலைவர் டாக்டர் வி வெங்கடேஷ், நிர்வாக அறங்காவலர்கள் டாக்டர் ரம்யா ஜெயராம், டாக்டர் நந்தினி வெங்கடேஷ், டாகடர் விஷ்ணுகுமார் ஆகியோர் மெடல்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினர்.

மேலும் அனைத்து போட்டிகளிலும் சிறப்பாக விளையாடி ஒட்டுமொத்த சாம்ப்பியன் பட்டத்தை புளூ அணியினர் தட்டிச் சென்றனர். அவர்களுக்கு கோயம்புத்தூர்சி ஆர்பிஎப் மத்திய பயிற்சி கல்லூரியின் நிர்வாக உதவி கட்டளை அதிகாரி ஆர் கிஷோர் குமார் வெற்றிக்கோப்பையை வழங்கினார். மாணவர்களின் விளையாட்டு உணர்வு, ஒழுக்கம் மற்றும் முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த விளையாட்டு விழா நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வி ஜி மருத்துவமனை ஊழியர்கள்,வி ஜி இன்ஸ்ட்டியூட் ஆப் பாராமெடிக்கல் சயின்சஸ் மற்றும் வி ஜி ஸ்கூல் ஆப் நர்சிங் கல்லூரி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் திரளாக கலந்துகொண்டனர். இறுதியில் பேக்கல்டி மேனேஜர் நவீன் நன்றி கூறினார்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை ரத்தினபுரி கிளையின் 40வது ஆண்டு விழா:

# கோவை தனியார் சிலிண்டர் நிறுவனங்கள் 2000 ரூபாய்க்கு விற்கக்கூடிய சிலிண்டர்களை 5,000 முதல் 6,000 வரை விற்பனை

## தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை மாநில தலைவர் டைமன் ராஜா குற்றச்சாட்டு



Swiggy,Zomato,Blink it போன்ற நிறுவனங்களால் வணிகர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு வருவதாகவும் இந்த நிறுவனங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப் போவதாக தெரிவித்தனர்.கோவைசிவானந்த காலனி பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை ரத்தினபுரி கிளையின் 40-வது ஆண்டு விழா நடைபெற்றது.இந்த விழாவில் அந்தப் பேரவையின் மாநில தலைவர் டைமன் ராஜா கலந்து கொண்டு வணிகர்களை வாழ்த்தி கலந்துரையாடினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய தமிழ்நாடு வணிகர்சங்கங்களின்பேரவை மாநில தலைவர் டைமன் ராஜா:

வருகின்ற மே 5-ம் தேதி சென்னை அருகே மறைமலைநகர் பகுதியில் 43-வது வணிகர் சங்கம் பேரவை மாநாடு நடைபெற உள்ளது என தெரிவித்தார்.

தேர்தல் ஆணையம் தற்போது சில கட்டுப்பாடுகள் தளர்த்துள்ளது வணிகர்களுக்கு சாதகமாக இருப்பதாக தெரிவித்தார்.வணிக சிலிண்டர் தட்டுப்பாட்டால் டீக்கடை மற்றும் டிபன் கடைகள் மூடப்பட்டுள்ளதால் வணிகர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் இதனை பயன்படுத்தி தனியார்சிலிண்டர்நிறுவனங்கள் இரண்டு ஆயிரம் ரூபாய்க்கு விற்கக்கூடிய சிலிண்டர்களை 5,000 முதல் 6,000 விற்பனை செய்து வருவதாக குற்றம் சாட்டினார். தமிழகத்தில் போதை பொருள் மற்றும் கஞ்சா நடமாட்டம் அதிகளவில் இருந்து வருகிறது ஆனால் பள்ளிக்கூடங்களில் இருக்கும் பகுதியில் 100 மீட்டர் தாண்டி பீடி சிகரெட் விற்பனை செய்தால் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்து தேச விரோதி போல் வணிகர்களை கொடுமை செய்து வருவதாகவும் இதனால் கோவை தொண்டாமுத்தூர் பகுதியில் ஒருவர் தற்கொலை செய்து செய்து கொண்டார்.இது குறித்து அரசு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.கொரோனா காலகட்டங்களில் Flipkart, Amazon போன்ற நிறுவனங்கள் ஆன்லைன் விநியோகத்தை ரத்து செய்து நிலையில் வணிகர்கள் தான் பொதுமக்களுக்கு பொருட்களை விநியோகம் செய்தார்கள்.அப்போது இறந்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பினை வழங்கவேண்டும்என்று கோரிக்கை வைத்தனர். Swiggy,Zomato,Blink it போன்ற நிறுவனங்களால் வணிகர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு வருவதாகவும் இந்த நிறுவனங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப் போவதாகவும் இதனால் சிறைக்குச் சென்றாலும் பரவாயில்லை என்று வேதனை தெரிவித்தனர்.எந்த அரசியல் கட்சி வணிகர்களின் கோரிக்கை நிறைவேற்றுகிறதோ அந்த அரசியல் கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பதாக கூறினர்.



எதிர்வரும் 23.4.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (26.03.2026) ஈரோடுமாவட்டம்,அந்தியூர்பேருந்துநிலையம்பகுதியில் பொதுமக்களிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை வடக்கு ஒன்றிய திமுக பாக முகவர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கான 'செயல் வீரர்' ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதற்கு ஈரோடு மாவட்ட திமுக செயலாளர் என்.நல்லசிவம் தலைமை வகித்தார். அம்மாபேட்டை ஒன்றிய செயலாளர் சரவணன் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில், தேர்தல் களப்பணி மற்றும் வியூகம் குறித்து விவாதக்கப்பட்டது.

# மகளிர்களுக்கு சுயதொழில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

## கூடலூர் திவ்யா தட்டச்சு பயிற்சி மையத்தில் மகளிருக்கான சுயதொழில் விழிப்புணர்வு முகாம்



ஆல் தி சில்ரன், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் ஆகியன சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தட்டச்சு பயிற்சி மைய ஆசிரியர் ரமணி தலைமை தாங்கினார்.

கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது மகளிர் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும், பொருளாதார ரீதியாகத் தனித்து இயங்கவும் சுயதொழில் செய்து முன்னேறலாம். சுயதொழில் தொடங்குவதற்கான அரசு மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் பல பயிற்சிகள் மற்றும் வாய்ப்புகள் வழங்கி வருகிறது. இதனை அடிப்படையாக கொண்டு தையல் பயிற்சி, சிறுதானிய உணவு தயாரிப்பு, கைவினைப் பொருட்கள் மற்றும் இயற்கை சோப்பு தயாரித்தல் போன்ற குறைந்த முதலீட்டில் தொடங்கக்கூடிய தொழில்கள் குறித்த பயிற்சி பெற்று பயன்பெறலாம் என்றார்.

ஆல்தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் பேசும்போது பெண்கள் மற்றவர்களைச் சார்ந்திராமல், சொந்தமாக வருமானம் ஈட்டுவதன் மூலம் சமூகத்தில் அவர்களுக்குக் அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பு கிடைக்கும் தாங்கள் தயாரிக்கும் பொருட்களை லாபகரமாகச் சந்தைப்படுத்துவது மற்றும் நவீன காலத்திற்கு ஏற்ப ஆன்லைன் மூலம் விற்பனை செய்வது வருவாயினை பெருக்கும் என்றார். நிகழ்ச்சியில் மகளிர்கள் பலர் கலந்து கொண்டனர்

# காரைக்குடி, அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் முத்தமிழ் விழா




காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் முத்தமிழ் விழா 26-03-2026 அன்று கல்லூரியின் உமையாள் அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவிற்குக் கல்லூரியின் முதல்வர் முனைவர் ப. வசந்தி அவர்கள் தலைமை வகித்தார். தமிழ் துறைத் தலைவர் முனைவர் சிதம்பரம் அவர்கள் வரவேற்புரை நல்கினார். இயற்றமிழ் மற்றும் இசைத்தமிழ் நிகழ்வாக தமிழிசையும் திரையிசையும் என்னும் தலைப்பில் மதுரை தன்முனைப்புப் பேச்சாளர் கவிஞர் இந்திராவிஜயலட்சுமி சிறப்புரையாற்றி னார். நாடகத் தமிழ் நிகழ்வாக தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் மாதவியின் மாண்பு என்ற தலைப்பில் புதிய நாடக அரங்கேற்ற விழா நடைபெற்றது.மேலும் அழகப்பா அரசு கலைக் கல்லூரி மாணவ, மாணவியரின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்விற்குத் இசை நாடக கலைஞர்களின் மாநில பேரவையின் தலைவர் பாலசுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.அழகப்பாபல்கலைக்கழகத்தின் அரங்கம் மற்றும்திரைப்படப்படிப்புகள் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் சுதா, காரைக்குடி இசை நாடக சங்கத் தலைவர் கவிஞர் காந்தி, காரைக்குடி இசை நாடக நடிகை கலைமாமணி தமிழ்ச்செல்வி, மாதவியின் மாண்பு என்ற நாடகத்தின் எழுத்தாளர் மோகன்,காரைக்குடி இசை நாடகநடிகர் கலைமாமணி கண்ணன், காரைக்குடி யாக்கை மகிழ்வரங்க இயக்குநர் பாஞ்சாலி ராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் அமுதா நன்றி கூறினார். விழாவில் பேராசிரியர்களும், ஆசிரியரல்லாப் பணியாளர்களும் மாணவ மாணவியரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




எதிர்வரும் 23.4.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (26.03.2026) நேற்று ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேருந்து நிலையம் பகுதியில் பொதுமக்களிடம் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.



தமிழக சட்டமன்றத் தேர்தல் ஏப்ரல் 23ல் நடைபெறுவதையொட்டி, ஈரோடு மாவட்டம் அம்மாப்பேட்டை ஒன்றியம் குருவரெட்டியூர் ஊராட்சியில் (மார்ச்.25) அன்று தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் "என் மை என் உரிமை" மற்றும் "வாக்களிப்பது கடமை" ஆகிய வாசகங்களுடன் அமைக்கப்பட்ட செல்பி பாயிண்ட் மூலம் வாக்காளர்கள் விழிப்புணர்வு பெற்றனர்.



ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் உள்ள வேதநாயகி உடனமர் சோழீஸ்வரர் திருக்கோவிலில், திருப்பணிகள் நிறைவடைந்து நேற்றைய தினம் காலை மகா கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதிகாலை முதலே நடைபெற்ற யாக வேள்விகள் நிறைவுற்றதும், சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கோபுர விமானம் மற்றும் மூலவருக்குப் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர்.இந்த மகாகும்பாபிஷேக விழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# நந்தா தொழிநுட்ப கல்லூரியில் ஆண்டுவிழா




*ஈரோடு நந்தா தொழில்நுட்ப கல்லூரியில் இரண்டு நாட்கள் கொண்ட ஆண்டு விழா "டெக்பிரீஸ் 2K26" நந்தா தொழிநுட்ப வளாகத்தின் கலைஅரங்கில் இனிதே நடைபெற்றது.*

*ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற முதல் நாள் விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஹாட்ஸ்டார் "ஹார்ட் பீட்" இணையத் தொடரின் நடிகர் சாருகேஷ் மற்றும் நடிகை படினி ஆகியோர் கலந்து கொண்டு ஆடல், பாடல்களுடன் மாணவர்களை உற்சாகப்படுத்தி விழாவினை சிறப்பித்தார்கள். மாணவ, மாணவியர்களின் தனிநடனம், மௌனநாடகம், குழுநடனம், போன்ற பல்வேறு கண்கவர் கலை நிகழ்ச்சிகளில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி மகிழ்ச்சி கொண்டார்கள். இரண்டாவது நாளில், நடந்து முடிந்த பருவத்தேர்வுகள் மற்றும் கல்லூரியில் நடைபெற்றபல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் மற்றும் தனக்கு ஒதுக்கப்பட்ட பாடங்களில் நுற்று சதவீதம் தேர்ச்சி கொடுத்த ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் சென்னையில் செயல்பட்டு வரும் ரீனால்ட் நிசான் ஆட்டோமோடிவ் நிறுவனத்தின் மனிதவள துணை பொது மேலாளர் பாலகிருஷ்ணன் பச்சயப்பன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.*

*முன்னதாக, கல்வியாண்டின் போது மாணவர்கள், உதவி பேராசிரியர்கள், பேராசிரியர்கள் புரிந்த சாதனைகள் அடங்கிய ஆண்டறிக்கையினை கல்லூரியின் முதலவர் முனைவர் ச. நந்தகோபால் வாசித்தார். மேலும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, நந்தா பொறியியல் கல்லூரியின் முதல்வர் யு.எஸ். ரகுபதி மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.*

*இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் மற்றும் சிறப்பு விருந்தினர் மனிதவள துணை பொது மேலாளர் பாலகிருஷ்ணன் பச்சயப்பன் ஆகியோர் சாதனைப் புரிந்த மாணவ- மாணவியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள். விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்திருந்த கல்லூரி முதல்வர், ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு கல்லூரி நிர்வாகத்தினர்கள் தங்களது பாராட்டுக்களைத் தெரிவித்து வாழ்த்தினார்கள்.*

# 400 கிலோ புகையிலைப் பொருட்கள் பறிமுதல் 2 பேர் கைது



*தூத்துக்குடி: காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக மறைத்து வைத்திருந்த 400 கிலோ புகையிலைப் பொருட்களைப் பறிமுதல் செய்த காவல் துறையினர், இரண்டு பேரை அதிரடியாக கைது செய்தனர். தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருகே காயல்பட்டினம், மாட்டுக்குளம் பகுதியில் உள்ள கடைகளில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்வதாக காவல் துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து அப்பகுதிக்கு ரோந்துச் சென்ற ஆறுமுகநேரி காவல் துறையினர், காயல்பட்டினம் சுலைமான் நகரில் உள்ள பீர் முஹம்மது (வயது 37) என்பவரது கடையைஅதிரடியாகசோதனைசெய்தனர். அப்போது விற்பனைக்காகபதுக்கிவைத்திருந்த சுமார் 3.750 கிலோ அளவிலான புகையிலைப் பொருட்களைப் பறிமுதல் செய்தனர். அதைத் தொடர்ந்து பீர் முஹம்மதுவிடம் காவல் துறையினர் விசாரணை நடத்தினர். மகாராஜபுரம் தெற்கு தெருவைச் சேர்ந்த செல்வராஜ் மகன் பாலகணேஷ் (வயது 36) என்பவரிடம் இருந்து புகையிலைப் பொருட்களை வாங்கியது தெரிய வந்தது. காவல் ஆய்வாளர் திலீபன் தலைமையிலான காவலர்கள், ஆறுமுகனேரி செக்போஸ்ட்டில் பதுங்கி இருந்து கண்காணித்தனர். இதற்கிடையே காவல் துறையினர், பாலகணேஷ் தொலைபேசி எண்ணை டிராக் செய்தனர். அதில் பாலகணேஷ் தூத்துக்குடியில் இருந்து ஆறுமுகநேரி நோக்கி வந்து கொண்டிருந்தது தெரிய வந்தது.*



எதிர்வரும் 23.4.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (26.03.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்குப்பதிவு அலுவலர்கள் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகளுக்கான பயிற்சி அளிக்கப்படவுள்ள மண்டல அலுவலர்கள் மற்றும் சட்டமன்ற அளவிலான பயிற்சி வல்லுநர்களுக்கான பயிற்சி கூட்டம் நடைபெற்றது.





எதிர்வரும் 23.4.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (26.03.2026) ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்று பேசியபோது எடுத்த புகைப்படம்.



எதிர்வரும் 23.4.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (26.03.2026) ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேருந்து நிலையம் பகுதியில் பொதுமக்களிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



எதிர்வரும் 23.4.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (26.03.2026) நேற்று ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேருந்து நிலையம் பகுதியில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்க பதாகையில் கையெழுத்திட்டு, தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.